**யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் - 2019**

---

ாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2710- எஸ்ஆர்ஜ (சாதாரண செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 (அ) ஆம் பிரிவு மற்றும் 2711- எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) (விசேட செயற்பாடுகள்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 (அ) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை மற்றும் வட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள வடக்கு மாகாண சபை ஊடாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதும் பாதுகாத்தலும் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ்டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,569.79 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2020 திசெம்பர 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்துவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| அ) 2019 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 315.45 மில்லியன் கூட்டுத் தொகையான வட்டி கட்டணங்கள் மற்றும் ரூபா 31.32 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கைதவிர்ப்புகள் குறைத்துக்கூறல் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கொள்கை தீர்மானத்திற்கு அமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிப்பிற்காக வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளிற்கான செயற் திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை ஏனென்றால் அந்த வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் கீழ் மொத்த கைதவிர்ப்புக்களையும் பிரதிபலிக்கும் வண்ணம் உரிய கிரயம் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 16.44 மில்லியன் மற்றும் ரூபா 25.30 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே மோட்டார் வாகனங்கள் மற்றும் பார வாகனங்கள் சிவில் வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைத்துக் காட்டல் மற்றும் சிவில் வேலைகளின் பெறுமதி அதிகரித்துக் காட்டல் | TWTM01 மற்றும் TWTM02 சிவில் வேலைகள் ஒப்பந்த பொதி ஊடாக குறித்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த கொள்வனவுகள் 2019 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சிவில் வேலைகள் வகுதியின் கீழ் | சொத்துக்களின் வேறுபட்ட பாவணைக் காலத்தைக் அடிப்படையாகக் கொண்டு நடைமுறையல்லா சொத்தின் கீழ் பதியப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்த கொள்வனவு சிவில் வேலைகள் வகுதியிலிருந்து வாகனங்கள் வகுதிக்கு மாற்றப்படும் என்பதுடன் உடனடியாக அடுத்துவரும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | |

**2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) FIDIC வழிகாட்டலின் பொது நிபந்தனையின் 14.8 ஆம் பிரிவின் பிரகாரம், சான்றுபடுத்திய விலைப் பட்டியல் 56 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியலின் GOSL பகுதியின் கொடுப்பனவு தாமதம் காரணமாக ரூபா 6.83 மில்லியன் கோரியிருந்தார். | FIDIC வழிகாட்டலின் மீறுகை காரணமாண மேலதிக கிரயம் ஏற்படும் சாத்தியம். | செயற்திட்டத்தினுடைய மூல கடனிற்காக ஆரம்ப நிதியளிப்பு ஒழுங்குகளிற்கு அமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியானது 78 சதவீதம் ஒப்பந்தத்தின் மொத்த செலுத்த வேண்டிய IPC கொடுப்பனவுகளில் செலுத்த வேண்டியிருந்ததுடன் மிகுதி 22 சதவீதம் இலங்கை அரசாங்க நிதிகளில் செலுத்த வேண்டியிருந்தது. அதேநேரம், ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்படாதிருந்த அந்த இலங்கை அரசாங்க நிதிகளை தீர்ப்பதற்கு செயற்திட்டத்தால் இயலாதிருந்தது. ஏனென்றால், 2019 ஆம் அண்டில் இலங்கை அரசாங்க நிதிகள் கிடைக்கவில்லை. 2020 யூலை மாதத்தில் இலங்கை அரசாங்க நிதிகள் பெற்ற பின்னர் கையிலிருக்கின்ற சகல நிலுவையாக இருக்கின்ற | தாமதமான கொடுப்பனவுகளிற்கான கட்டணங்களை தவிர்ப்பதற்கு உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பட்டியல்களும் 2020 யூலை 28 இல் தீர்க்கப்பட்டிருந்தன.<br><br>எவ்வாறாயினும், ஒப்பந்த உடன்படிக்கை 14.8 ஆம் நிபந்தனைகளில் தாமதப்பட்ட கொடுப்பனவுகள் இலங்கை அரசாங்க கொடுப்பனவுகள் மாத்திரம் அதன் தாமதமான கொடுப்பனவுகளிற்காக ஒப்பந்தகாரர்கள் வட்டிக் கட்டணங்களை கோரியிருந்தார். ஒப்பந்தகாரர்கள் எதிர்காலத்தில் உரிய நேரத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய கொடுப்பனவுகளை பெறுவார்கள். | |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 8.13.4 ஆம் பிரிவு மற்றும் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 10 சதவீதத்தை விஞ்சி கிரய முரண் தேன்றும் போது அல்லது அனுமதிக்கப்பட்ட வேலை நோக்கெல்லை மாற்றமடைந்த போது கிரய மதிப்பீட்டு திருத்தங்களிற்கான உத்தேசங்கள் தொர்பில் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கைகள் மற்றும் அதிலிருந்து சம்பந்தப்பட்ட சரியாக பூரணப்படுத்தப்பட்ட அறிக்கைகள் கிரய மதிப்பீட்டு பரீட்சிப்பு குழுவிற்கு அவற்றினை சமர்ப்பிக்கும் நோக்கில் நீர் வழங்கல் அமைச்சு செயலாளின் | செயற்திட்ட கிரயம் எதிர்பாராத அளவு அதிகரிக்கும் சாத்தியம். | செயற்திட்டமானது நோக்கெல்லை மாற்றங்கள், ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் நிகழத்தக்க பொறுப்பு ஏற்பாடுகளிற்குள் முரண் அளவுகள், நிகழத்தக்க பொறுப்பு ஏற்பாடுகளை விஞ்சிய ஒப்பந்த முரண்கள் மற்றும் உரிய காலத்தில் உரிய அதிகாரிகளின் அவசியமான அனுமதிகளை பெறல் போன்றவற்றை முகாமை செய்வதற்கு எப்போதும் முயற்சிகளை எடுக்கின்றது.<br><br>எவ்வாறாயினும், ஒப்பந்த அமுலாக்கலின் போது, சில பாரிய ஒப்பந்தங்கள் பொதுவாக அதன் நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் வேலைத்தள நிலமைகளினால் | இடைக்கால கொடுப்பனவு சான்றிதழில் அனுமதிக்கப்பட்ட முரண் மாத்திரம் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிப்புகளுடன் அரச நிதிப் பணப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டமானது ஒப்பந்த இல. PEIC/JKWWP/TWTM/2014/02 தொடர்பில் மேற்குறித்த பிரமாணங்களை பின்பற்றுவதற்கு தவறியிருந்தது. | | முரண்கள், சேமிப்புகள் மற்றும் நீக்கங்களை கொண்டிருக்கின்றன. PEIC/JKWSSP/TWTM/2014/02 ஆம் இலக்க ஒப்பந்தத்தில் இரணைமடு குளத்திலிருந்தான குடி தண்ணீர் நோக்கெல்லை மற்றும் தழையடி கடல் நீர் சுத்திகரிப்பு பொறி பொருத்துதல் காரணமாக இலங்கை ரூபா 242,507,258.00 தொகைக்காக சாவகச்சேரி சந்தி முதல் பூநகரி சந்தி வரையான பிரதான பரிமாற்ற நீக்கத்திற்காக ஒரு பாரிய நீக்கம் செய்யப்பட்டது என தயவுடன் குறிப்பிடுகின்றோம். செயற்திட்ட நெறிப்டுத்தல் குழுவிடமும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் நோக்கெல்லை மாற்றத்திற்கான அனுமதி பெறப்பட்டது. அதேபோல இந்த நோக்கெல்லை மாற்றம் பரந்தன் முதல் பூநகரி பரிமபற்ற நுழைவு வழி வரை அமுலாக்கப் பட்டிருந்ததுடன் இது முரணாக கருதப்பட்டிருந்தது. | |
| (இ) | 2018 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய தேசிய பாதீட்டு திணைக்களத்தின் BD/ID166/08/Ven-Tem ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், செயற்திட்டமானது ரூபா 42.00 மில்லியன் குறைந்த விலை வரையறைக்குள் 02 டபிள் கப் வாகனம், வக்கோ லோடர் மற்றும் வூம் கிரைன் டிரக் என்பவற்றினை கொள்வனவு செய்வதற்கு அனுமதி பெற்றிருந்தது. எவ்வாறாயினும் | தேசிய பாதீட்டு திணைக்களச் சுற்றறிக்கையை மீறியமையால் செயற்திட்ட செயலாற்றலை பாதகமாக பாதிக்கக் கூடும். | யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்திற்கான செயற்திட்ட பணிப்பாளர் 2018 மே மாதத்தில் வாகனக் கொள்வனவிற்காக அனுமதி கோரியிருந்தார். 2018 ஆகஸ்ட் 13 இல் நீர் வழங்கல் அமைச்சு ஊடாக தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டது. கொள்வனவு | செயற்திட்டமானது தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து மேலதிக கிரயத்திற்காக அனுமதி பெறவேண்டும். |

| | |
|---|---|
| செயற்திட்டமானது ரூபா 3.03 மில்லியன் மேலதிக கொடுப்பனவிற்காக அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 45.03 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. | நடைமுறை காரணமாக முறையே 2018 கடைசியிலும் 2019 முற்பகுதியிலும் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. அனுமதிக்கப்பட்டதிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற வரையான காலப்பகுதியின் போது குறிப்பிடத்தக்களவு நாணய மாற்றுவீத தாக்கம் காரணமாக வாகனங்களின் சந்தை விலை அதிகரித்திருந்தது. அந்த வாகனங்கள் சர்வதேச போட்டி கேள்வி நடைமுறை ஊடாக அந்த திகதியிலுள்ள சந்தை விலை கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | நடவடிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் இலக்கு | அடையப்பட்டது | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | பூமைவெளி, கரவெட்டி, நவினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு என்பவற்றில் தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணம் | 05 தண்ணீர் கோபுரம் | 10 தண்ணீர் கோபுரம் | யாழ்ப்பாண குடா நாட்டிற்கு பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்கலில் தாமதம் | ஒப்பந்தமானது 2019 மே 28 இல் வழங்கப்பட்டது, 2019 யூலை 02 இல் ஒப்பந்தம் தொடங்கப்பட்டதுடன் மூல பூர்த்தியாக்கல் திகதி 2020 திசெம்பர் 22 ஆக உள்ளது (540 நாட்கள்). 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 சதவீத | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பௌதீக முன்னேற்றமாக இருந்ததுடன் தொழிலாரம்பிப்பு முற்பணம் உள்ளடங்கலாக 09 சதவீத நிதி முன்னேற்றத்தை கொண்டுள்ளது. 2020 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு தற்போது பௌதீக முன்னேற்றம் 40 சதவீதமாக உள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்ட முகாமைத்துவம் ஒருங்கிணைந்த அமுலாக்கல் பிரிவு மற்றும் நீர் வழங்கல் செயற்திட்டப் பிரிவு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன பட்டியலிடப்பட்ட கால அட்டவணைக்குள் பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்த முன்னேற்றத்தை நெருக்கமாக கண்காணிக்கின்றது. | |
| (ஆ) | பளை, கொடிகாமம், மீசாலை, பூநகரி, புத்தூர், நாவற்குழி, காரைநகர் என்றவற்றில் விநியோக வலையமைப்பின் குழாயிடல் | 250 கிமீ | 110 கிமீ | பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக சம்பந்தப்பட்ட கிரயங்கள் அதிகரிக்கக்கூடும். | செயற்திட்ட முகாமைத்துவம் ஒருங்கிணைப்பு மற்றும் அமுலாக்கல் பிரிவு நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன உரிய நேரத்தில் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கான முன்னேற்றங்களை நெருக்கமாக கண்காணிக்கின்றன. உலகத்தில் கோவிட்-19 நோய் தொற்று உள்ள போதிலும் 2020 செப்தெம்பர் 30 இல் 170 | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கிமீ குழாயிடல் வேலைகளை ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. இருந்த போதிலும் ஒப்பந்தகாரர் வேலைகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தக்கூடிய ஆட்களை இரட்டிப்பாக செய்கின்ற கிறீவ் வாகனங்களை பெற்றிருந்தது. உலகத்தில் கோவிட்-19 நோய் தொற்று நிலைமை காரணமான 2021 மார்ச் மாத இறுதியளவில் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | |
| (இ) | யாழ்ப்பாண நகரப் பகுதியில் விநியோக வலையமைப்பு குழாயிடல் | 283 கிமீ | இல்லை | நிர்மாணத்தின் தாமதம் செயற்திட்ட நோக்கங்களை பாதகமாக பாதிக்கக்கூடும். | யாழ்ப்பாண நகர விநியோகத்தின் குழாய்கள் வழங்கி பொருத்துதல் ஒப்பந்தத்திற்கான வரைவு அமைச்சரவை விஞ்ஞாபனம் 2020 யூன் 15 இல் சமர்ப்பிக்கப்பட்டது. செயற்திட்டமானது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதிக்காக காத்திருக்கின்றது. இந்த ஆண்டு இறுதியளவில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 2020 திசெம்பர் 31 இல் கடன் முடிவுறுத்தபடும். |
| (ஈ) | சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் | 50 கிமீ | இல்லை | யாழ்ப்பாண குடா நாட்டிற்கு பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்கலில் தாமதம் | SWRO பொறி பொருத்துதல் ஒப்பந்தம் வழங்குவதற்கான நிதியின் கிடைப்பனவை உறுதிப்படுத்தி ஒப்பந்தம் | செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கிய பின்னர் சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டத்திற்கான கேள்வி விளப்பரப்படுத்தப்பட வேண்டுமென ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் சேர்ந்து தீர்மானிக்கப்பட்டது. |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் திருத்திய நோக்கெல்லையின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியத்தில் நீர் வழங்கும் நோக்கில், கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறி பொருத்துவதையும் உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்தையும் 2022 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் பட்டியலிடப்பட்டது. ஆகவே, ரூபா 1,140 மில்லியன் கிரயத்தில் 15 தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் மற்றும் ரூபா 5,536 மில்லியன் கிரயத்தில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்ற குழாய்கள் பொருத்துதல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் | தாழையடி SWRO பொறி நிர்மாணம் இதுவரை தொங்கப்படாமையால் சகல நிர்மாணங்களும் பயனிற்றிருந்ததுடன் யாழ்ப்பாண குடா நாட்டிற்கு பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்கலில் தாமதம். | 2017 திசெம்பரில் கைசாத்திட்ட கடன் உடன்படிக்கைகள் மூலம் மருதங்கேணி, தாழையடியில் SWRO பொறி பொருத்துவதற்கு பிரதான நோக்கெல்லையில் மாற்றத்ததை செய்யும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.அ.டொலர் 120 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்கம் ஐ.அ.டொலர் 33 மில்லியன் உள்ளடங்கலாக மொத்தமாக ஐ.அ.டொலர் 153 மில்லியன் செயற்திட்டம் அதன் நோக்கங்களை அடைவதற்கு நிதியளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் விரிவான கிரய மதிப்பீடுகளின் பிரகாரம், 2017 நவம்பர் மாதம் PAM உடன் தொடர்புபடுத்தி தாழையடியில் SWRO பொறி பொருத்துவதற்கு ஐ.அ.டொலர் 70 மில்லியன் மதிப்பிடப்பட்டதுடன் 2017 திசெம்பர் தொடங்கி 2020 யூன் இறுதியளவில் பூர்த்தியாப்பட | செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைகளை எதிபார்க்கப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கீழான அந்த சகல நிர்மாண வேலைகளும் பூர்த்தியாக்கப் பட்டிருப்பினும் முறையான தண்ணீர் வளம் கிடைக்காமையால் பயனற்றிருந்தது.

வேண்டுமெனவும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டிருந்தது. கொள்வனவு நடைமுறைக்கு ஏற்கனவே ஏறத்தாழ 1,190 நாட்கள் எடுத்திருந்தமையால் SWRO பொறி பொருத்துதல் ஒப்பந்தம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் L3603-SRI-மேலதிக நிதியளிப்பின் கீழ் இன்னமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகலமைப்புச் சபை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணங்கி சுத்திகரிப்பு பொறியின் வடிவமைப்பு நிறைவேற்றி செயற்படுத்துவதில் இந்த முதலாவது கொள்வனவு நடைமுறை உள்ளது. ஆகவே, பின்னர் குறைவாக மதிப்பிடப்பட்ட கேள்வியாளரை தெரிவு செய்யும் நோக்கில் SCAPC மற்றும் ADB ஐ போல கேள்வியாளர்கள் மற்றும் மத்திய வங்கியிடமிருந்து முக்கிய தெளிவுபடுத்தல்கள் கோரப்பட்டது, மேலும், நிராகரிக்கப்பட்ட 2 ஆவது குறைவான கேள்வியாளர் 2020 பெப்ரவரி 19 இல் மேன் முறையீடு செய்யப்பட்டதன் காரணத்தால் பின்னர் விசாரணைகள் நடைபெற்றதுடன் 2020 மே 28 இல் PAB ஆனது SCAPC கூட்டியிருந்தது. 2020 யூலையில் அமைச்சரவை தாள் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் 2020 இறுதியளவில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதிக்காக காத்திருக்கின்றது.

<table>
<tr><th></th><th></th><th></th><th></th></tr>
<tr>
<td>(ஆ) சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பிரதான பரிமாற்ற பகுதி 01 இன் குழாய்கள் வழங்கி பெருத்துவதற்கான ஒப்பந்தம் ரூபா 2,646 மில்லியன் கிரயத்தில் 2016 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 யூலை அளவில் பூர்த்தியாக்கப்பட வெண்டுமென பட்டியலிடப்பட்டது. மொத்த குழாயிடல் வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் மீசாலை மற்றும் நல்லூரில் இரண்டு நீர் தேக்கங்களின் நிர்மாண வேலைகள் 2019 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2018 ஆகஸ்ட் முதல் 2020 செப்தெம்பர் வரை ஒன்பது தடவைகள் ஒப்பந்தகாரருக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.</td>
<td>அரசாங்கத்திற்கு மேலதிக கிரயம் ஏற்படும் சாத்தியம்</td>
<td>சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பிரதான பரிமாற்றத்திற்கான ஒப்பந்த நீடிப்பு கீழே காரணங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.
<table>
<tr><th>நீடிப்புகளின் எண்ணிக்கை</th><th>கால நீடிப்புக்கான காரணங்கள்</th></tr>
<tr><td>1 ஆவது</td><td>1. காணி தகராறு காரணமாக நல்லூர் நீர்தேக்க வேலைத் தளத்தில் செயற் படுத்துவதில் தாமதம்.<br>2 மோட்டார் சைக்கிள் துகள்கள் படிதல்<br>3. நாவற்குழி மற்றும் கைதடி பாலத்தில் சுற்றுவட்டம் சீர் படுத்தல்</td></tr>
<tr><td>2 ஆவது</td><td>1. வேலைகளை பூர்தியாக்குவதற்கு தொழில் திறனுடைய மற்றும் திறனற்ற தொழிலாளர் குறைவாக இருந்தமை</td></tr>
<tr><td>3 ஆவது</td><td>1. பாரிய மழையின் பின்னர் தண்ணீர் நிரம்பியுள்ள பகுதியில் வால்புகள் பொருத்துவதில் தாமதம்.<br>2. RDA வீதி சீர்படுத்தல் காரணமாக நாவற்குழி மற்றும் கைதடி பாலத்தில் வீம் பொருத்துவதில் தாமதம்.<br>3. எல்லை கல் இடுதல் காரணமாக குழாய்கள் குழாயிடுவதில் தாமதம்.</td></tr>
</table></td>
<td>செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td>
</tr>
</table>

| | |
|---|---|
| 4 ஆவது | 1. 2019 ஏப்ரல் 21 இல் ஈஸ்டர் தாக்குதலும் அதன் பின்னரான ஊரடங்கு உத்தரவுகாரணமாக வேலைகள் தாமதம். நாளாந்தம் பொருட்கள் தேவைப்பட்டமையால் ABC மற்றும் குவாரி துகழ்கள் பெறுவதில் ஒப்பந்தகாரர் கஸ்ரங்களிற்கு முகங்கொடுத்தனர். (ஏனென்றால் வெடிக்கும் பொருட்கள் மற்றும் RDA தேவைகள்)<br>2. டீசல் மற்றும் இஞ்சின் அறைகளில் செய்யப்பட்ட மாற்றங்கள். |
| 5 ஆவது | 1. RDA நாவற்குழி மற்றும் கைதடியில் இரண்டு புதிய பாலங்கள் அறிமுகப்படுத்தியது. விபரங்கள் கீழேயுள்ளன. நிர்மாணம் 2016 நவம்பரி தொடங்கப்பட்டு 2018 ஆகஸ்ட் மாதத்தில் பூர்த்தியாக்கப்பட்டதுடன் 2019 ஆகஸ்ட் வரை குறைபாட்டுக் காலப் பகுதியாக இருந்தன.<br><br>பின்னர் RDA ஆனது A-09 வீதியின் மேற்பகுதியில் குழிகளை நிரப்பி மட்டமிடுதலை |

| | |
|---|---|
| | அனுமதித்திருந்ததுடன் 2019 யூன் 17 இல் அவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் பொது மக்கள் இடையூறுகளை குறைத்தல் மற்றும் எதிர்கால பாரமரிப்பு காரணமாகவும் முற்பாதுகாப்பு பெட்டி கல்வெட்டு வகை தரையிடுதலை அறிமுகப்படுத்தியது. |
| 6 ஆவது | வேலைத்தளப் பகுதியில் தண்ணீர் இன்மையால் நிலத்தடி குழாய்கள் குழாயிடுவதற்கு கடினமாகவுள்ளன. |
| 7 ஆவது | 1. GOSL கொடுப்பனவுகளில் தாமதம்<br>2. வேலைத்தளப் பகுதியில் தண்ணீர் இன்மையால் நிலத்தடி ஆழ் குழாய்கள் குழாயிடுவதற்கு கடினமாகவுள்ளன. |
| 8 ஆவது | 1. ஒப்பந்த பொது நிபந்தனையின் 8.4 ஆம் உட்பிரிவிற்கமைய உலக சுகாதார தாபனத்தால் தொற்று நோயாக பிரகடனப் படுத்தப்பட்ட கோவிட்-19 நோய் தொற்று காரணமாக வெளிக்கள வேலைகள் தாமதப்பட்டமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும், 2017 இல் கடன் திருப்பிச் செலுத்தல் தொடங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்தால் பேணப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவருக்கு ஐ.அ.டொலர் 497.20 கடன் திருப்பிச் செலுத்தல்கள் செய்யப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு அபிவிருத்தி பணிகளை கண்காணிப்பதற்கு அரசாங்கம் பிரச்சனைகளிற்கு முகங்கொடுக்கின்றது. | ADB மிசன் வருகை குழு உள்ளடங்கலாக செயற்திட்டம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை மற்றும் அமைச்சுக்கள் என்பன பல்வேறு மட்டங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒழுங்காக பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்களை நாளதுவரையாக்குகின்றன. ADB ஆனது பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்களை தெளிவாக வழங்குகின்றன. கைச்சாத்திட்ட கடன் உடன்படிக்கைகளுடன் இணங்கும் நோக்கில் செயற்திட்டத்திற்காக ADB உடன்பட்ட நிதியளிப்பிலிருந்து கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டியினை சாட்டுதல் செய்கின்றன. எவ்வாறாயினும், உரிய அமுலாக்கல் முகவர் மற்றும் நிறைவேற்றல் முகவர் இந்த வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களை சாட்டுதல் செய்தல் தொடர்பில் ERD ஊடாக ADB உடன் பேரம்பேசுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்திட்டத்தின் கீழ் பல்வேறு நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும் உரிய காணிகளின் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு | காணியின் உரிமையாண்மை மாற்றுவதிலுள்ள தாமதம் செயற்திட்ட நடவடிக்கைகளை பாதகமாக பாதிக்கும் சாத்தியம். | அதிகளவான காணியின் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. கரவெட்டி மற்றும் புங்குடுதீவை தவிர நிர்மாண வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டது. புங்குடுதீவில் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு மற்றும் சுவீகரிப்பு செயற்பாடு நடைமுறையில் உள்ளமையால் இழப்பீடு செலுத்தப்படவில்லை. ஒரேதடவையில் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் தாமதப்படுத்தாமல் காணியின் உரிமையாண்மையை மாற்றி பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| மாற்றப்பட்டிருக்கவில்லை. | | சுவீகரிப்பு பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. உரிமையாளருக்கு கொடுப்பனவு செய்யப்படுவதுடன் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மாற்றப்படும். கரவெட்டி தண்ணீர் கோபுரத்தின் நிர்மாண வேலைகள் செயற்பாட்டில் உள்ளதுடன் நிர்மாண வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு முன்னர் இந்த ஆண்டு இறுதியளவில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்படும். (சுவீகரிப்பு பிரிவு 17, பூர்த்தியாக்கல் கட்டத்தில் உள்ளமை).<br><br>கழிவகற்றி இறைத்தல் நிலையங்கள் சுவீகரிப்புகளின் நிர்மாணத்துடன் தொடர்பான மிகுதிக் காணிக்காக சுவீகரிப்பு பூர்த்தியாக்கப்பட்டதுடன் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டது. | |

## 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

--------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் இயலக்கூடியவாறு முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் | செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு பொறிமுறை நலிவாக இருக்கும். | வழமைபோல செயற்திட்ட பணிப்பாளர் செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு ஏற்றவாறு வார இறுதிநாட்கள் உள்ளடங்கலாக வாரம் ஒன்றிற்கு PMCIU-JKWSSP இல் அதிக நாட்கள் செலவழிக்கின்றார். மேலும் குறிப்பாக செயற்திட்ட பதவியணியினருக்கு | வினைத்திறனான வழியில் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்கல் பொறுப்புக்களை கையேற்பதற்கு இயலக் கூடியவாறு முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் ஈடுபடுத்தப்பட |

ஈடுபடுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அதன் கடமைகளை மேவுவதற்கு 2018 ஏப்ரலில் இருந்து செயற்திட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தது.

இடையில் சுமுகமான செயற்பாடுகள் மற்றும் வினைத்திறனான முகாமைத்துவம் என்பவற்றிற்காக தொழில்நுட்ப கையளிப்புகள் மாற்றப்பட்டிருந்தது. மேலும் வடக்கு RSC மற்றும் JKWSSP - PMCIU இற்கு இடையில் சிறந்த தகவல் தொழில்நுட்ப தொடர்பை செயற்திட்ட அமுலாக்கல் செயற்பாடுகள் வழமையாக நாளது வரையாக்கப்படுகின்றன.

வேண்டுமென வேண்டப்பட்டது.